ரு. மேலான மானிடத்துதித்த ஒருவன் தான் பிறந்ததன் நோக்கத்தை ஆராய்ந்து அதனைப் பெறமுயலானாயின், அவனிலும் சாலச்சிறந்த அறிவிலி வேறொருவனு முண்டுகொல்!

சா. சாத்திரங்கள் பலபேசினாலென்; யாகங்கள் பலபுரிந்தாலென்; கடவுளை இடையறாது வணங்கினாலென்; தன்னையும் பரமாத்மாவையும் ஒன்றெனக்காணும் மெய்யுணர்வு பெற்றாலன்றி நூறு பிரம கற்பங்கள் சென்றாலும் ஒருவன் வீடுபெறெய்தலரிதென்க.

எ. பிறப்பிறப்பில்லாப் பேரின்ப வாழ்வைத் திருவின் பெருக்கால் ஒருவன் பெறலரிது. வேதங்களு மிதன் உண்மையை விரித்துரைக்கின்றன. ஆதலால் புண்ணிய வினைகளும் ஏனை நல்லறங்களும் வீடுபேறாய பெருஞ்செல்வத்தைப் பெற ஏதுவானவையல்ல.

அ. அறிவுடையானொருவன், மாயாசம்பந்தமான புறப்பொருட் பற்றுக்களைநீக்கி, ஞானகுருவை யடைந்து, அக்குருவின் உபதேச உண்மைவழி நின்று வீடுபேற்றைப் பெற முயலவேண்டும்.

கூ. அழிதன்மாலையனவாய புறப்பொருட்களிலும் புண்ணியச் செயல்களிலும் பற்றற்றநிலையை அடைந்தானொருவன் மெய்யுணர்வின் வழிச்சென்று பிறப்பிறப்பாகிய பேராழியில் மீட்டும் மூழ்காது தன்னைப் போற்றிக் கொள்ளல் வேண்டும்.

கo. பரமான்மாவைத் தன்னுட் கண்டின்புறச் சாதனை செய்வான் புக்க அறிஞன், வினை விளைக்குஞ் செயல்களிற் பற்றற்றவனாய், பிறப்பிறப்பென்னும் பெருந்தளையை அறுக்க முயலக்கடவன்.

கக. நல்வினைகளைப் புரிவதால் மனத்தூய்மை பெறலாமன்றி, கடவுளைக் கண்டின்புறத்தகும் நல்லொளியைப் பெற முடியாது. மெய்யுணர்வோ பகுத்தறிவால் மாத்திரம் பெறப் படுவதொன்றன்றி, கோடிக்கணக்கான நல் வினைகளினால் எய்தப்படுவதொன்றல்ல.

நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௱௯. மாயை உள்பொருளுமல்ல; இல் பொருளுமல்ல; இரண்டுமல்ல. அணுக்களா லாக்கப்பட்டதுமல்ல. ஆக்கப்படாதது மல்ல. சொல்லாற்கூறும் தகைத்ததுமன்றி, ஓர் நூதன வியப்புப் பொருளாயுமிருக்கின்றது.

௱௰. இருட்டின்கண் எவ்வாறு ஒருவன் பழுதையைப் பாம்பெனப் பிறழவுணர்ந்து பின் வெளிச்சத்தில் அது பாம்பல்லக் கயிறெனவுணர்ந்தானோ அதுபோலத் தன்னின்மிக்காரும் ஒப்பாரு மில்லாத பரம்பொருளைத் தன் மெய்யுணர்வாற் கண்டவன் இந்த மாயையின் மயக்கினின்றும் தெளிவான். இந்த மாயைக்கு இராசதம், தாமதம், சாத்விகம் என முக்குணங்கள் உண்டு.

௱௧௧. இராசதம் கிரியா சக்தியெனக் கூறப்படும். இச்சக்தியால் இந்த உலகத்தோற்றமும் ஒடுக்கமுமாய கிரியைகள் இடைவிடாது நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதினின்றே இன்ப துன்பங்களான செயல்கள் நிகழ்ந்து வருகின்றன.

௱௧௨. இச்சை, கோபம், அவா, பெருமை, பகை ஆதித்தன்மைகள் இராசத குணத்தினின்றுந் தோன்றுகின்றன. இவை, ஆன்மாவைப் பந்தித்து உலகத்தோடொன்றச் செய்கின்றன. ஆதலின், இராசதகுணம் பந்தம் விளைப்பதொன்றே.

௱௧௩. திரோதானம் அல்லது மறைப்புச்சக்தி தாமதகுணத்தினின்று முண்டாவது. இச்சக்தி பொருட்களின் மெய்யியல்புகளை மறைத்துப் பிறழ்ந்து தோன்றச்செய்யும். இம்மறைப்பால் மறுபிறப்புக்கள் உண்டாகின்றன.

௱௧௪. ஞானிகளும் அறிவாளர்களும் ஆன்மாவின் மெய்யியல்பாகிய சூக்கும நிலையைத் தரிசித்த நுண்ணறிவாளர்களும் ஒரோவொருக்கால் இத்தாமத குணத்தின் வயப்பட்டு மயங்கி அம்மயக்கத்தில் தாம் கண்டதே மெய்யெனக் கொள்வாரேயானால் அந்தோ! இதன் வலியை யார்தான் வகுத்துரைப்பார்கள்?

௱௧௫. மெய்யுணர் வின்மையும், ஐயமும், திரிபுணர்ச்சியும் தாமதகுணத்தின் மயக்கிற்பட்டோருக் கென்று முண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உஎச. அவ்வாறே மனத்தின்கண்ணே ஊழிகாலமாக நிறைந்து கிடக்கும் துருவை அறிவெனுங் கருவியால் இடைவிடாது தேய்க்க ஆன்மாவின் பூரண நன்மணம் வீசும்.

உஎரு. தன்னையறியும் நாட்டம் புறப்பொருட்களின் மேலுள்ள பற்றுக்களால் தடைப்பட்டு நிற்கும். தன்னை நாடிப் புறப்பொருட்களின் பற்றையறுத்தவிடத்து ஆன்மா தானாகவே வெளித்தோன்றும்.

உஎசு. மனமானது ஆன்மாவிலே, அதன் தியானத்திலே மூழ்கிக் கிடப்பப் புறப்பொருட்களின் பற்றுமறவே தடையிலாஞான மாகிய ஆன்மதெரிசனம் உண்டாகின்றது.

உஎஎ. ஒரு யோகி சதாகாலமும் பிரமத்தின் தெரிசனையின்கண் மூழ்கிக் கிடப்பதால், அவன் மனமிறந்து விடுகின்றது. இறந்தவுடன் ஆசையறுகின்றது. அதுபோல, உன் மனச்சங்கற்பத்தை நீ நீக்கிவிடுவாயாக.

உஎஅ. தமோகுணச்செயல்கள் சாத்துவீக ராசத குணங்களாலும், ராசதகுணச்செயல்கள் சாத்துவிககுணத்தாலும், அழியச் சாத்துவிககுணமோ சுத்தமான தனி நிலையின்கண்ணே யழிகின்றது. ஆதலின், சாத்துவிக உதவிகொண்டு சங்கற்பங்களை யறு.

உஎகூ. பிராரத்துவ கன்மம் உள்ளவரை, தேகம் நிலைபெறுமென்பதை அறிந்து சாந்தனுயிருந்து திடத்தோடு உலகத்தை வெல்லு.

உஅ0. நான் சீவன் அல்ல நானே பிரமம் என எண்ணிச் சடப்பொருட்களின் பற்றை நீக்கி, முற்பிறவிகளிலே செய்துள்ள கருமங்களின் வேகத்தால் வந்த மயக்கத்தை யொழி.

உஅக. ஞானநூற் கேள்வியாலும், புத்தியாலும், அநுபவஞானத்தாலும், நீயே அந்தப் பரப்பிரமமெனஅறிந்து ஓர் அணுவளவேனும் மயக்கமின்றித் தெளி.

உஅஉ. ஞானிக்குத் தான் செய்யுங் கிரியைகளில் யாதும் தொடர்பில்லை; ஏனெனின், அவன் விருப்புவெறுப்பின்றிய வேண்டுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௪௮௧. மனமோ விறந்ததைய! மற்றதன் செயல்கள் மாண்ட
இனையனென் றுரைக்கவொண்ணா விறைவனும் நானு மொன்றாம்
தனிநிலை யடைந்தேன் பெற்ற தண்ணருள் கணிக்க லாற்றேன்
அனையுமாய்த் தந்தையாகி யாண்டரு ளின்பத் தேவே

௪௮௨. பிரமமும் அமுதை யொத்தே பிரிவிலாத் தன்மைத் தாகி
யருவியிற் கருணை வாரி யடங்கிடும் யானுங் கூட
வருவதா மின்ப மாட்சி வாக்கினாற் கூறற் காற்றேன்
உருகிய மனமு மின்பத் துயர்மண முணர்கின் றேனால்

௪௮௩. உலகினைக் கரந்தா ருண்டோ! ஓடியே மறைந்த துண்டோ!!
நிலவிடா திற்ற கொல்லோ! நின்றதாற் கண்ணின் முன்னே
அலகிலா விளையாட் டோதா னதிசய மிதனினுண்டோ
நலமெலாந் திரண்டஞான நாதனே நவில்வா யையா!

௪௮௪. ஆனந்த மாய தேவ வமுதெழு வாரி புக்கின்
ஊனமென் றொதுக்க வுண்டோ வுயர்வுதாழ் வுரைக்க லாமோ
தானுமப் பரமு மொன்றாந் தனிநிலை திளைத்த லல்லால்
நானெனப் பிரம மென்ன நவின்றிட வெண்ணு மோதான்

௪௮௫. இந்நிலை யிருந்த காலை யிவ்வுல கிறந்த தென்கண்
தஞ்செய லற்ற சாது [illegible]னு மொன்றுந் தேரேன்
விஞ்சிய வின்ப மாகி விளங்கிடும் பரத்தை யன்றி
யெஞ்சிய தொன்றுங் காணே னிறைவநீ வாழி யூழி

௪௮௬. முத்தனே போற்றி மேலாம் முதல்வனே போற்றி ஞானத்
தொத்தனே போற்றி வேறோ ரொப்பிலா மணியே போற்றி
கத்தனே போற்றி நாயேன் கருணையங் கடலே போற்றி
அத்தனே போற்றி யென்றே அழுதழு தறைவா னின்னும்

௪௮௭. பற்றிலாப் பரனே போற்றி பகரொணா மேன்மைத் தாய
சிற்பர முணர்தி யெற்குச் செம்பத மீந்தாய் போற்றி
சுற்றமுந் துன்பு நோயும் சுழற்றிய வெம்மை நீக்கக்
கற்றையங் கிரணம் வீசுங் கலைமதிக் கருணை போற்றி

௪௮௮. இப்பிறப் பெடுத்த பேற்றை யின்றியா னடைந்தே னையா
வெப்புறு பிறப்பி தப்பாம் வினைவிலங் கறுத்தேன் வேறு
தப்புறு நெறியிற் சேரேன் தனிமுதற் பரமு மானேன்
ஒப்பிலா மணியே யெல்லாம் உன்னருள் நோக்கா லன்றோ

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

